# <u>ஆற்காடு நகராட்சி</u>

**2022** ஜுலை மாதம் **28** ஆம் நாள் **வியாழக்கிழமை** பிற்பகல் **3.00** மணிக்கு **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை **3**ல் விதி **2(1)** இன்படி **சாதாரணக் கூட்டம்** ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள மன்ற அரங்கில் நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

குறள் எண். 825) மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்

சொல்லினால் தேறற்பாற் றன்று.

**பொருள்.** மனத்தால் தம்மோடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர் கூறுகின்ற சொல்லைக் கொண்டு எத்தகைய ஒரு செயலிலும் நம்பித் தெளியக்கூடாது

## <u>மன்றப்பொருள்</u>

**பொருள் எண்.01)**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன்–2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:– 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்**.154, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.02)**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன்–2022 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்**.155, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.03)**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நகராட்சிக்குட்பட்ட தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இலவச காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை தொடங்குவதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்குட்பட்ட 6 ஆரம்ப பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கு இலவச காலை சிற்றுண்டி வழங்குவதற்கு நகராட்சி மனைப்பிரிவில் உள்ள இடத்தில் புதியதாக ஒருங்கிணைப்பு சமையற் கூடம் கட்டடம் கட்டுதல் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.23.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இப்பணிக்கான செலவினத்தை தற்போது பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும், பின்னர் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில் அத்தொகையினை பொதுநிதியில் ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.156, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.04)**

இந்நகராட்சியில் SBM Grant 2018-2019ம் ஆண்டு திட்டத்தின் கீழ் வார்டு எண்.9-ல் கோட்டை தெருவில் மரபு வழி கழிவுகளை அகற்றும் (Biomining) பணிக்கு ரூ.162.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 05.07.2022ம் தேதி (Online மின்னணு ofline open Tender முறையில் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டது. இதில் online ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை மேலும் 1) CLENERGY INNOVATIONS PRIVATE LIMITED, 2) GREEN WORLD ஆகிய இரண்டு நிறுவனங்கள் Offline-ல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தனர், இப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப ஆய்வுகள் (Technical Evaluation) மேற்கொண்டதில் 1) CLENERGY INNOVATIONS PRIVATE LIMITED, 2) GREEN WORLD ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை எனவே, இவ்ஒப்பந்தப்புள்ளியினை ரத்துசெய்து இப்பணிக்கு ரூ.162.00 இலட்சத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இப்பணியி.ன் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மறுஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் வெளியிடுவதற்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.157, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.05)

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுக்கவும், அடையாள அட்டை எடுத்து ஆன்லைன் பதிவு செய்திடும் பணிக்கு 04.07.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் Online மற்றும் offline–ல் கோரப்பட்டது. இப்பணிக்கு Sense Image Technologies Pvt Ltd, என்ற நிறுவனம் மட்டும் Online மற்றும் offline–ல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தது. இப்பணிக்கு (Single Tender) ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதால் இவ்ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது என்பதால் மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இப்பணியின் அவசரஅவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.158, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.06)

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் /பெருந்தலைவர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ12/592/2022 நாள்.11.04.2022–ன் படி அங்கன்வாடி மையங்கள் மேம்படுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் திட்டம் 2021–2022ல் கீழ்

ஜானகிராமன் பூங்கா அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பழுதுபராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்**.159, பதிவுசெய்யப்பட்டது.

பொருள் எண்.07)

ஆற்காடு நகராட்சியில் ஓராண்டு சாதனைகள் முடிவுற்ற திட்டப்பணிகள் குறித்தான விவரத்தினை தினசரி நாளிதழ்களில் ஓராண்டு சாதனை விளம்பரம் வெளியிட்டதற்கு கீழ்கண்ட விளம்பர நாளிதழ் நிறுவனத்திற்கு

வழங்க வேண்டிய பில் தொகை ரூ.46,149/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ்களின் பெயர் மற்றும் விளம்பர நாள் | பில்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 21.05.2022 / தினகரன் | 13,494 |
| 2 | 03.07.2022 / தினகரன் | 27,720 |
| 3 | 31.05.2022 / மாலை மலர் (சாதனை சிறப்பு மலர் 2022) | 4,935 |
| | **மொத்தம்** | **46,149** |

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.160 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.08)

ஆற்காடு நகராட்சியில் SUSV திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு தள்ளு வண்டிகள் சப்ளை செய்தல் பணிக்கான 26.05.2022ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி 12.05.2022ம் தேதிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டதற்கு Bright Advertising விளம்பர நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய பில் தொகை ரூ.3,124/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.161 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.09)

ஆற்காடு நகராட்சியில் SBM 2018–19 ஆண்டு திட்டத்தின் கீழ் Biomining பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் 05.07.2022ம் தேதி கோரப்பட்டதினை மாலைமலர் மற்றும் Times of India தினசரி நாளிதழ்களில் 24.06.2022ம் தேதிய விளம்பரம் வெளியிட்டதற்கு Moulis Advertising service Pvt, Ltd, நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய பில் தொகை ரூ.41,530/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.162 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.10)

இந்நகராட்சிக்குட்பட்ட TNHB–II ல் Resoure Recovery centre கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தில் தற்காலிகமாக பணிகள் மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும் என W.P.No15044/2022ன் படி உயர்நீதிமன்றம் சென்னையில் தடையாணை பிறபிக்கப்பட்டள்ளது. மேலும் திரு.ஆர்.அல்லாபிச்சை, எ.சையத் சாகுல் அமீத், கே.பூபதி, எம்.தர்மராஜன் TNHB–II) ஆகியோர்கள் ஆணையர், ஆற்காடு நகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இராணிப்பேட்டை அவர்கள் மீது W.P.No15044/2022ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார் இவ்வழக்கு தொடர்பாக உயர்நீதிமன்றம் சென்னையில் ஆணையர் சார்பாக திரு.பி.ஆனந்த் B.A.B.L., வழக்கறிஞர் அவர்கள் வாதாடவும், Counter தயார்செய்து தந்தமைக்கும் ரூ.15,000/– வழக்கு கட்டணம் வழங்குமாறு 17.06.2022ல் கடிதம் அளித்துள்ளார். எனவே, மேற்கண்ட வழக்கு கட்டணம் ரூ.15000/–த்தை திரு.பி.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.163 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.11)

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை எடுத்து நூண்ணுர மையத்திற்கு கொண்டு செல்லும் TN3AC6429 என்ற இலகுரக வாகனம் 2022 ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெறவேண்டியுள்ளதால் இப்பணிக்கு விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள தோராயச் செலவினத் தொகை ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN3AC6429 என்ற இலகுரக வாகனம் 2022 ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெறவேண்டியுள்ளதால் இப்பணிக்கு விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றப் பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) வாகனச் செலவினத் தொகையினை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1152/2022/எச்1

**தீர்மான எண்**.164 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12)

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு நான்கு மகளீர் குழு 52 பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதில் 30.06.2021 ஆம் நாளுடன் மன்ற அனுமதி முடிவடைகிறது இப்பணியினை மேலும் ஆறு மாதங்களுக்கு 01.07.2022 முதல் 31.12.2022ஆம் நாள் வரைக்கும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட 2021–2022ஆம் வருடத்திய தினக்கூலி வ.எண்.01. ரூ.352/–ன் அடிப்படையில் இப்பணியினை நீட்டித்து ஊதியத் தொகையினை வழங்க தோராயச் செலவினத் தொகை ரூ.33.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகரத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியினை தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டு வருவதில் மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் ஊதியம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) டெங்கு கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்குண்டான தினக்கூலியினை மாத ஊதியத் தொகையாக வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2600/2015/எச்1

**தீர்மான எண்**.165 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.13)

ஆற்காடு நகராட்சிக்கு நகராட்சி வழக்கறிஞராக ந.க.எண்.1693/2021/சி1, நாள்.25.01.2022ன் படி திரு.சு.சிவக்குமார் அவர்களை நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து. இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் நகராட்சி சார்பாக மற்றும் நகராட்சிக்கு எதிராக இராணிப்பேட்டை மற்றும் ஆற்காடு நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகவும், நிலுவையில் உள்ள வழக்குகளில் ஆஜராகவும் மற்றும் அவ்வப்போது சட்ட கருத்துரு கோரும் தகவலுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க வேண்டியுள்ளதால் நகரமைப்பு பிரிவு சார்ந்த வழக்குகளுக்கு மட்டும் வழக்கறிஞர் கட்டணமாக தோராய செலவினத்தொகை ரூ.1,00,000/–(ஒரு இலட்சம் ) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.586/2022/எப்1

**தீர்மான எண்**.166 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14)**

இந்நகராட்சியில் உள்ள அலுவலக கட்டிடத்தில் புதியதாக 10KW Solar Power plant (on Grid set) பொருத்துதல் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.9.98இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ. கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.167 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15)**

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (Peoples Movement for Clean Cites) நடத்த அறிவுறுத்தலின்படி, இந்நகரட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 25.06.2022ஆம் நாளில் மக்கள் தூய்மைக்கான இயக்கம் நடத்தப்பட்டதில் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேனர்கள் ஓம் சக்தி டிஜிட்டல் பேனர் & எல்.இ.டி போர்டு, ஆற்காடு என்பவரின் செலவினத் தொகை ரூ.10400/– மற்றும் விஜயலட்சுமி பந்தல் அமைப்பாளர் மற்றும் சப்பையர்ஸ், ஆற்காடு என்பவரின் செலவினத் தொகை ரூ.10150/–யினை நேரடியாக செலவனத்தை மேற்கொள்ளப்பட்டதில் இதற்கான மொத்த தொகை ரூ.20550/– யினை மேற்படி உரிமையாளர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) தமிழ்நாடு அரசு அறிவுரைகளின்படி 25.06.2022ஆம் நாளில் தூய்மைக்கான மக்கள் இயக்கம் இயந்நகரத்தில் நடத்தப்பட்டதில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கண்காட்சியினை நடத்த உள்ளூர் பேனர் மற்றும் பந்தல் அமைப்பாளர்களை கொண்டு நேரடியாக அவசர அவசியம் கருதி நிகழ்ச்சி நடத்தியமைக்கு மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இதற்கான செலவினத் தொகையினை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்ட (SUC) நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**.168 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16)**

ஆற்காடு நகரம் வார்டு எண்.17, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வார்டு எ, பிளாக் – 34ல் நகரளவு எண்.235, 236, 239, 240 முதல் 245 வரை உள்ள சர்வே எண்ணில் 8.48 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் புதியதாக 121 மனைகள் அமைக்கப்பட்டு, நகர் ஊர் அமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்.1885/2008/வே.ம3, நாள்.04.10.2013–ல் ம.வ/ந.ஊ.து.இ வே.ம.எண்.23/2013 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதி–III என பெயரிடப்பட்டு நகராட்சியின் ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் புதியதாக அமைக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நகராட்சி தெரு பதிவேட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி– III என புதியதாக தெரு பெயர் சேர்க்கவும் மேலும் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மனைகளுக்கு மண்டலம் ‘A’ வகைப்பாட்டில் காலிமனை வரி விதிப்பு செய்யவும் மேற்படி மனைப்பிரிவில் வீடுகள் கட்டப்பட்டால் ‘B’ வகைப்பாட்டில் சொத்துவரி விதிப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலம்

2) நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.980/2022/அ1

**தீர்மான எண்**.169 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17)**

இந்நகராட்சியின் குத்தகை இனங்கள் எதிர்வரும் **2022–2023**ஆம் ஆண்டு முதல் **2024–2025**ஆம் ஆண்டு வரை கீழ்கண்டுள்ள (**1** முதல் **5** வரை உள்ள) குத்தகை இனங்களை அரசாணை எண்.**181**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **19.09.2008**ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளதால், இதனை செயலாக்கம் செய்யும் விதமாக **1** முதல் **5** வரை உள்ள குத்தகை இனங்களுக்கு **3** ஆண்டு கால அளவிற்கு குத்தகை கோருபவர்கள் தற்போது செலுத்தப்பட வேண்டிய பொறுப்புத் தொகை, வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட வேண்டிய சொத்து மதிப்பு சான்று மற்றும் சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை அந்தந்த குத்தகை இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகையினை அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல இனங்களின் விவரம் (கடைகள்) | செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை | வட்டாட்சியரிடம் பெறவேண்டிய சொத்து மதிப்பு அசல் சான்றிதழ் | வட்டாட்சியரிடம் சொத்து மதிப்பு சான்று பெறாதவர்கள் ஏலத்தின்போது கடைக்கு செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலூர் மெயின்ரோட்டில் உள்ள தரைதள கடை எண்.2 (100 சதுர அடி) | ரூ.20,000 | ரூ.2,00,000/- | ரூ30,000/- |
| 2 | வேலூர் மெயின்ரோட்டில் உள்ள மேல்தள கடை எண்.1 (100 சதுர அடி) | ரூ.20,000/- | ரூ.2,00,000/- | ரூ.30,000/- |
| 3 | வேலூர் மெயின்ரோட்டில் உள்ள மேல்தள கடை எண்.2 (100 சதுர அடி) | ரூ.20,000/- | ரூ.2,00,000/- | ரூ30,000/- |
| 4 | மாங்காய்மண்டி கிழக்கு பக்க குடோன் (1656 சதுர அடி) | ரூ.20,000/- | ரூ.2,00,000/- | ரூ30,000/- |
| 5 | பேருந்து நிலயம் இரும்பு பங்க் கடை (காலியிடம்) | ரூ.20,000/- | ரூ.2,00,000/- | ரூ30,000/- |

**அ.கு.** 1) 2022-2023ஆம் ஆண்டு மூன்றாண்டுகளுக்கு 1 முதல் 5 வரை உள்ள குத்தகை இனங்களை பொது ஏல சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல அறிக்கையினை உள்ளூர் அச்சகத்தில் அச்சிட்டு கொள்ளவும், ஏதேனும் ஒரு தமிழ் நாளிதழில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், இராணிப்பேட்டை அவர்கள் மூலமாக விளம்பரம் செய்யவும் மாவட்ட செய்தி மலரில் வெளியிடவும், இதற்கான செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி குத்தகை இனங்களை பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் செயல்படுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1237/2022/அ1)

**தீர்மான எண்**.170 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18**

ஆற்காடு நகராட்சி, வார்டு எண்.17, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வார்டு–எ, பிளாக்–34, நகரளவு எண்.235, 236, 239, 240 முதல் 245 வரை உள்ள சர்வே எண்ணில் 8.48 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் புதியதாக 118 குடியிருப்பு மனைகளாகவும் மற்றும் 03 கடை மனைகளாக அமைக்கப்பட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி–3 என, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்.1885/2008/வே.ம3, நாள்.04.10.2013ல் ம.வ/ந.ஊ.து.இ வே.ம.எண்.23/2013 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு ஆய்வு கட்டணம், அபிவிருத்தி கட்டணம், கூராய்வு கட்டணம் மற்றும் உட்பிரிவு கட்டணம் என மொத்தம் ரூ.2,64,700/–தொகையை நகராட்சி கருவூலத்தில் 20.01,2021ல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு மீது ஸ்தல ஆய்வு மேற்கொண்டு மனைப்பிரிவு நிபந்தனை 1(2)ன்படி மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, வடிகால் வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி மற்றும் கல்வெர்ட்(சிறுபாலம்) ஆகிய அடிப்படை வசதிகள் அனைத்தும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் நாள்.24.12.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், திறவிடம் மற்றும் பூங்கா இடங்கள் அனைத்தும் பத்திர பதிவு ஆவண எண்.486/2022, நாள்.28.01.2022ல் தானப் பத்திரம் மூலம் நகராட்சி ஆணையாளரின் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள 118 குடியிருப்பு மனைகளுக்கும் மற்றும் 03 கடைக்காக ஒதுக்கப்பட்ட மனைகளுக்கும் மொத்தம் 121 மனைகளுக்கு வருவாய் பிரிவு மூலம் தனித்தனியாக காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என வருவாய் ஆய்வர் 27.06.2022 அவர்களால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்.1885/2008/வே.ம3, நாள்.04.10.2013ல் ம.வ/ந.ஊ.து.இ வே.ம.எண்.23/2013 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி வரைப்படம் மற்றும் நிபந்தனைகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்.1885/2008/வே.ம3, நாள்.04.10.2013ல் ம.வ/ந.ஊ.து.இ வே.ம.எண்.23/2013 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்ட வரைப்படத்தின்படி 118 குடியிருப்பு மனைகளும் மற்றும் 03 கடைக்காக ஒதுக்கப்பட்ட மனைகள் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி–3 மனைப்பிரிவிற்கும் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.2093/2007/எப்1

**தீர்மான எண்**.171 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.19)

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 30.06.2022ல் புதிய ஆட்சியர் அலுவலகத்தை திறந்து வைத்து பல்வேறு நலதிட்டங்களை வழங்க வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி பிரதிநிதிகளையும வரவேற்று தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியிட்டதற்கு கீழ்கண்ட விளம்பர நாளிதழ்களுக்கு சம்பதப்பட்ட விளம்பரம் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய பில்தொகை ரூ.1,62,645/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ்களின் பெயர் | விளம்பர நாள் | பில்தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | தினமலர் | 30.06.2022 | 26460 |
| 2 | தினத்தந்தி | 30.06.2022 | 26460 |
| 3 | தினகரன் | 30.06.2022 | 26460 |
| 4 | மாலைமுரசு | 29.06.2022 | 12600 |
| 5 | இந்து தமிழ் இசை | 30.06.2022 | 13440 |
| 6 | மாலைமலர் | 29.06.2022 | 9975 |
| 7 | மாலைதமிழசம் | 30.06.2022 | 14700 |
| 8 | தினமணி | 30,06,2022 | 23100 |
| 9 | தினசெய்தி | 30,06,2022 | 9450 |
| | | **மொத்தம்** | **162645** |

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.172 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.20)

இந்நகராட்சியில் சித்த மருத்துவ பிரிவில் சித்த மருத்துவர் பணியிடம் 21.03.2009 பிற்பகல் முதல் காலியாக உள்ளது. ஆற்காடு நகராட்சியில் சித்த மருத்துவ அலுவலராக பணிபுரிந்த திரு மருத்துவர் ஆர்.ரவி, அவர்கள் பழனி நகராட்சிக்கு பணி மாறுதலில் சென்று விட்டபடியால் இந்நகராட்சியில் சித்த மருத்துவர் பணியிடம் தொடர்ந்து காலியாக உள்ளது. சித்த மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளதால் சித்த மருத்துவ பணிகள் மேற்க்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், சித்த மருத்துவமனைக்கு வரும் புற நோயாளிகளை கவனிக்க இயலாத நிலை உள்ளது. மேலும், பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளான

மருத்துவ பணிகளை மேற்கொள்வதிலும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, நிர்வாக நலன் கருதி, சித்த மருத்துவ பிரிவு பணிகளை உரிய காலத்திற்குள் செய்து முடிக்க ஏதுவாக இந்நகராட்சிக்கு காலியாக உள்ள சித்த மருத்துவர் பணியிடத்தினை பூர்த்தி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1126/2022/சி1

**தீர்மான எண்**.173, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) பெ.தேவி
நகரமன்ற தலைவர்
ஆற்காடு நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆற்காடு நகராட்சி